


### மார்த்தாண்டம் கிறிஸ்தவ கல்லூரியில்

# ஆசிரியர் தின விழா

## தாரகை கத்பர்ட் எம்.எல்.ஏ. பங்கேற்பு

குழித்துறை, செப்.8-

மார்த்தாண்டம் நேசமணி நினைவு கிறிஸ்தவ கல்லூரியில் ஆசிரியர் தின விழா கொண்டாடப்பட்டது. நிகழ்ச்சிக்கு கல்லூரி தாளாளர் பிரபின் தலைமை தாங்கினார். கல்லூரி பொறுப்பு முதல்வர் பிஜி வரவேற்று பேசினார். இந்த விழா வில் சிறப்பு விருந்தினராக தாரகை கத்பர்ட் எம்.எல்.ஏ. கலந்து கொண்டு வாழ்த்தி பேசியதுடன், கல்லூரியில் சிறப்பாக பணியாற்றிய பேராசிரியர்களுக்கு விருதுகள் வழங்கினார். கல்லூரி துணை முதல்வர் ஐசக் சோபனராஜ், முதுகலை இயற்பியல் துறை மாணவி அபிராமி ஆகியோர் பேசினர். ஆசிரியர் தின விழா கவிதையை தமிழ்த்துறை பேராசிரியர் அலெக்ஸ் ஜேக்கப் வாசித்தார். முடிவில் ஆஸ்டின் ஜாண் மனோகர் நன்றி கூறினார்.